# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C. 152/2025 | Date | : 17.02.2026 |
| Deposition of Witness for | : **அ.சா.7** | Taluk | : |
| Name | : **செல்வி. ஜீவிதா** | Calling | : **காவல் உதவி ஆய்வாளர்** |
| Father / Husband Name | : **மோகன்குமார்** | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.02.2026.

**(எதிரி 1, 2, 4 முதல் 7 நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். 3 ம் எதிரி ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது. )**

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி காவல் நிலையத்தில் பணி புரிந்த ரகு காவல் உதவி ஆய்வாளர் பணி ஓய்வு பெற்று சென்றுவிட்டதாலும், செந்தில்குமார் காவல் ஆய்வாளர் பணி இடமாற்றம் பெற்று சென்று விட்டதாலும், அவர்களுடைய கையொப்பம் எனக்கு பரிட்சயம் என்பதாலும், வழக்கின் சாட்சிகள் பிறழ் சாட்சியாக மாறியதாலும், கோப்பின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 09.01.2022 ம் தேதி 11.00 மணிக்கு மகுடஞ்சாவடி காவல் உதவி ஆய்வாளர் ரகு நிலைய அலுவலில் இருந்த போது எடப்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற அடிதடி காயத்தகவலின்

பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து ஆஜர் செய்ததை காவல் உதவி ஆய்வாளர் குற்ற எண். 9/2022 ஆக சட்டபிரிவுகள் 294(b), 427, 448, 323, 324, 506(2) IPC ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். பின்னர் முதல் தகவல் அறிக்கையை வாதியின் புகார் வாக்குமூலத்துடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.2, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். **(மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.8 ஆகவும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**)

3) பின்னர் கடந்த 09.01.2022ம் தேதி 12.30 மணிக்கு சாட்சிகள் அருண்குமார், வசந்தி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர், பட்டியல் சாட்சிகள் கருப்பண்ணன், பெரியசாமி, சேகர், பழனிசாமி, கிருஷ்ணவேணி ஆகியோரைத் தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.10 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** அன்றைய தினமே 13.15 மணிக்கு சம்பவ வீட்டில் உடைந்த மர கதவின் பாகத்தை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அதன் வாயிலாக கைப்பற்றியுள்ளார். **(மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது). (மேற்படி மர கதவின் பாகம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

4) பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் கடந்த 10.01.2022ம் தேதி 10.00 மணிக்கு சாட்சிகள் முரளி, சந்திரசேகர் ஆகியோர் முன்னிலையில் ஏழுமாத்தானூர் பஸ் நிறுத்தம் அருகே சோதனை செய்து

கொண்டு இருந்தபோது, எதிரிகள் ஐனேஸ் மற்றும் கோபி ஆகியோரை கைது செய்து அவர்கள் அளித்த ஒப்புதல் வாக்குமுலத்தை பதிவு செய்துள்ளார். சம்பவத்திற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனத்தையும், கத்தியையும் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்துள்ளார். (**மேற்படி இருசக்கர வாகனத்தை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.13 மற்றும் கத்தியை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி இருசக்கர வாகனம் அ.சா.பொ.2 மற்றும் கத்தி அ.சா.பொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. படிவம் 91 அ.சா.ஆ. 15 மற்றும் 16, 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

5) இந்நிலையில் புலன் விசாரணை செய்ததில் இருந்தும் சாட்சிகளை விசாரணை செய்ததில் எதிரிகள் ரஞ்சித்குமார் ஆபாச வார்த்தையால் திட்டி கத்தியை காட்டி மிரட்டி அடித்து தெரியவந்ததால், சட்டப் பிரிவை 294(b), 427, 448, 323, 324, 506(2) IPC இருந்து 147, 148, 294(b), 427, 448, 323, 324, 506(2) IPC ஆக மாற்றம் செய்து, கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் 2 சங்ககிரி அவர்களுக்கு அறிக்கை சமர்பித்தும் வழக்கு கோப்பை வழக்கின் மேல் விசாரணைக்காக மகுடஞ்சாவடி காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார். **(சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேலும் செந்தில்குமார் மற்றும் ஜெனிஷ், செல்வராஜ் ஆகியோர்களை கூடுதலாக எதிரிகளாக சேர்த்து, எதிரிகள் சேர்த்தல் அறிக்கை தயார் செய்துள்ளார். **(எதிரிகள் சேர்த்தல் அறிக்கை அ.சா.ஆ.19 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

6) இவ்வழக்கு கோப்பை விசாரணைக்காக காவல் ஆய்வாளரிடம்

காவல் உதவி ஆய்வாளர் ஒப்படைத்துள்ளார். இவ்விசாரணைக்கு எடுத்துக் கொண்ட காவல் ஆய்வாளர் சாட்சிகளை விசாரணை செய்ததில் காவல் உதவி ஆய்வாளரிடம் சொன்ன வாக்கு மூலத்தையே சொன்னதால், புதிதாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் பூமிநாதன் பிணையில் சென்றுவிட்டதால், கைது செய்யவில்லை. மற்ற எதிரிகளை கடந்த 10.01.2022ம் தேதி கைது செய்து இந்நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் இந்நீதிமன்ற பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். ரஞ்சித்குமார் சிகிச்சை அளித்து சான்று வழங்கிய மருத்துவர் டாக்டர். லாவண்யா அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்பகாயங்கள் மற்றும் கொடுங்காயம் என்று சான்று வழங்கப்பட்டுள்ளது. **(விபத்து பதிவேடு உடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.20 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** மேலும் சுரேஷ் மற்றும் ரகு காவல் உதவி ஆய்வாளர் அவர்களை விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

7) இத்துடன் காவல் ஆய்வாளர் விசாரணையை முடித்து எதிரிகள் மீது கடந்த 27.07.2025ம் தேதி, சட்டப்பிரிவுகள் 147, 148, 294(b), 427, 448, 323, 324, 506(2) இதச–வின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–**

மேற்படி வழக்கில் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை

என்றும், பொய் புகார் பெற்று சரிவர புலன் விசாரணை செய்யாமல் இவ்வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சரிவர புலன்விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:–** இல்லை.

Witness – Sd/– Jeevitha

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D. Sivakumar,
Judicial Magistrate No.II,
Sankari.